RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நில வரம்புகளும் விருந்தோம்பல் மாண்புகளும்

இராம. பரிமளம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.

# Land Limits and Honors of Hospitality

**R. Parimalam [a, *]**

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore – 641 014. Tamil Nadu, India

* Corresponding Author: parimalamr@gmail.com

Received: 10-04-2024
Revised: 12-06-2024
Accepted: 23-06-2024
Published: 31-07-2024

Check for updates

**ABSTRACT**

Hunger is common to all living things. Humans have always had a social obligation to cook food, eat food, and share food with others. The man who lived in a cultured social system has seen the development of civilization through the food available according to the land patterns in which he lives. The purpose of the research paper is to explore the background of these.

**Keywords:** Cooking - Food Community Duty - Land Boundary - Hospitality- Types of Food - Food is Medicine

## முன்னுரை

தமிழ்ச் சமூகம் மிகவும் பழமையான மரபுகளையும், பண்பாட்டு எச்சங்களையும் கொண்டுள்ளது. வடஇந்தியப் பகுதிகளில் எண்ணற்ற திராவிடப் பழங்குடியினர் பண்பாட்டின் பழமையைப் பாதுகாத்து வருகின்றனர்.

பழமையான இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியம் தமிழ் மக்களின் மேம்பட்ட வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

வாழ்கின்ற முறையில் தமிழன் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற முறையில் ஐந்திணைகளாகப் பிரித்து அவற்றிற்குரிய முதல், கரு, உரிப்பொருள்களை வகைப்படுத்திய பாங்கு நாகரிகத்தின் மணிமுடியாய்த் திகழ்கின்றது. அவ்வடிப்படையில் அம்மக்களின் உணவுப்பண்பாடு என்பதே பரிணாம வளர்ச்சிக்கு வித்தூன்றுவதாய் அமைந்துள்ளது.

ஏனெனில் தமிழர் உணவென்பது ஒருபொது அடையாளம் சார்ந்ததாகும். உணவும் சமூகமும், அல்லது உணவும் பண்பாடும் என்பது நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. ஒவ்வொரு பண்பாட்டிற்கும் சமூகத்திற்கும் குழுவிற்கும், தனிநபருக்கும் உறவுவழித் தனித்தனியான அடையாளம் ஏற்படுகிறது. சங்க இலக்கியப் பதிவுகளிலிருந்து இந்த நீண்ட மரபினை இனங்காண முடியும். தமிழர்கள் உணவைப் பல பெயரிட்டு அழைத்து வந்தனர். உணா, வல்சி, உண்டி, ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம், உறை, ஊட்டம் என்று பட்டியலிடுகின்றது பிங்கலந்தை.

சங்க காலத்தில் வீடுகளில் தேறல் அமைத்து வருவோருக்கு மொந்தையிலிட்டு உபசரிக்கத் தனியொருவர் நியமிக்கப்பட்டிருந்ததையும் சான்றுகளால் அறியமுடிகின்றது. அத்தகைய

சான்றிலிருந்து உணவென்பது பசியாறுவதற்கான உயிரியல் கூறாக அல்லாமல், சமூக வினையாற்றலுக்கு உரியதாகப் பரிணமித்து விட்டதைக் காண்கின்றோம். உணவே மருந்து, மருந்தே உணவு எனக் கொண்ட சமூகம் இது.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்" (குறள்.)

என்று உயரிய வழிமுறையைப் போற்றிய சமூக அமைப்பைத் தமிழ்ச் சமுதாயம் கொண்டிருந்தது. தமிழ்ச்சிந்தனை மரபில் குறிஞ்சியில் உணவுகளைச் சுடுவதும், முல்லையில் வேக வைத்தலும், நெய்தல், மருதத்தில் பொரித்தல், சமைத்தல் எனும் வகையிலும் பண்பாட்டு வளர்ச்சி மேலோங்கிக் காணப்படுகிறது.

பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய 'காய்கறி' என்னும் சொல் காய்களையும், கறி என்று சொல்லக்கூடியது மிளகையுமே குறிப்பதாய் அமைகின்றது. கருங்கறி அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இறைச்சி உணவிற்காக மிளகு அதிகமாய் பயன்படுத்தப்பட்டதால் இறைச்சியே 'கறி' என வழங்கப்பட்டது. (தொ.பரமசிவன், 'பண்பாட்டு அசைவுகள்', ப.16)

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மேம்பட்ட நாகரிக வாழ்வை மேற்கொண்டிருந்த தமிழ்ச் சமூகத்தினரின் உணவு மற்றும் விருந்தோம்பல் முறை பற்றிய செய்திகளைச் சங்க அக நூல்கள் வழியாக நில அடிப்படையில் ஆய்ந்து தெளிவது பயனுடைத்து எனும் நிலையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## குறிஞ்சி நிலம் சார் உணவுகள்

குறிஞ்சி நில மக்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கக் காரணம், தாங்கள் வேட்டையாடிய விலங்குகளைப் பகுத்தளித்துச் சுற்றம் காத்த மரபினையுடையதே ஆகும். மலை அனைத்து வளங்களையும் தன்னகத்தே, கொண்டமையால், மலைவாழ் மக்களும் சிறப்பினைப் பெற்றமை அறியப்படுகின்றது. குறிஞ்சி நில மக்களிடத்தும் உயர்ந்தோர், பொதுவானோர் என்ற பிரிவுகள் இருந்தமைக்குச் சான்றுகள் காணக் கிடைக்கின்றன.

"மலைவானருள் குடியாலும், செல்வத்தாலும் உயர்ந்தவர் பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி எனப்பெயர் பெற்றனர். மலைவானருள் பொதுமக்கள் குறவர், கானவர், குறத்தியர் எனப்பட்டனர்". (இராமநாத செட்டியார், சங்ககாலத் தமிழர் வாழ்வு, ப.58)

## நோன்பு உணவு

சங்கக் குறிஞ்சிப் பாடல்கள், குறிஞ்சி நில மக்களின் வாழ்வின் வளத்தை வெளிப்படுத்துவனவாகவும், பண்பாட்டின் முதிர்ச்சி நிலைக்கு வழிகோலும் விதத்திலும் அமைந்துள்ளன எனில் மிகையன்று. பார்ப்பனர்கள் விரத உணவை மேற்கொண்டு வாழ்ந்தமைக்குக் குறுந்தொகைப் பாடல் ஒன்று சான்றாக அமைகின்றது.

"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே

செம்பூ மூங்கின் நல்நார் களைந்து

தண்டொடு பிடித்த தாழ்க மண்டலத்துப்

படிவ உண்டிப் பார்ப்பன மகனே" (குறுந்தொகை, 45 (1-4)

எனும் பாடல் விளக்கி நிற்கின்றது.

பழமையான நாகரிகம் கொண்டவர்களுள் தமிழர் செம்மாந்து வாழ்வதற்கான காரணம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்ட பண்பட்ட, வளமான வாழ்வினை வகுத்தமைத்தமையே ஆகும்.

நோன்பு இருத்தல் என்பதே பண்பாட்டின் படியாய் அமைந்துள்ளது. அதையும் முறைப்படி நோற்றனர் என்பது அவர்தம் கொள்கையின் பெருமைகளைப் பறைசாற்றுவதாய் அமைந்துள்ளது. சான்றாக நற்றிணைப் பாடல்களைக் காட்டலாம்.

“வான் பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்

கைஊன் இருக்கையின் தோன்றும் நாடக” (நற்றிணை, 22( 16 - 2)

எனும் பாடல் நோன்பினை மேற்கொள்பவர்கள் நீராடிய பிறகே உணவை உண்டனர் எனும் மேன்மையினைப் பறைசாற்றுவதாய் அமைந்துள்ளது.

இவைமட்டுமல்ல, சூளுரைத்து அவை நிறைவேறிய பிறகே நான் உணவு உண்பேன் என்றும் குறிஞ்சி நில மக்கள் வாழந்துள்ளமை அவர்களின் நாகரிக மேம்பாட்டினை உணர்த்துகிறது. குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் குறித்த பல்வேறு ஆய்வுகளைச் செய்த ஞா.ஸ்டீபன் அவர்கள், குறிஞ்சி நிலத்தில் கிடைக்கின்ற, மலைவாழ் மக்களின் முக்கிய உணவுகளாக அமைபவை தேன், திணை, கிழங்கு, இறைச்சி ஆகியவையே. இவையனைத்தும் இயற்கையாகவே குறிஞ்சிப் பகுதியில் கிடைக்கின்றன. மேலும்,

“குறிஞ்சி நில உணவு வகைகள் இனக்குழு வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் அவர்கள் இயற்கையாகக் கிடைத்த உணவைச் சமைத்து உண்ணவும் அறிந்திருந்தனர்” என்று விளக்குகிறார். (ஸ்டீபன், தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், ப.33)

## விருந்தோம்பற்பண்பு

தினை பயிரிட்டுள்ள பகுதியில் காவல் காத்துக் கொண்டிருக்கும் கானவனின் வீர நிலையையும், விருந்தோம்பற் பண்பையும் நற்றிணைப் பாடல் சிறப்புடன் எடுத்துரைக்கின்றது.

முள்ளம்பன்றி ஒன்று தினையை உண்ண வருவது கண்டு கானவன் அம்பு எய்து, தம் இல்லத்திற்குச் சென்று தலைவியிடம் கொடுத்து அதனைத் தம் சுற்றத்தார் அனைவருக்கும் கொடுக்கச் செய்த பான்மையினை,

“சாரல்

கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை

தேம் கமழ் கதும்பின் கொடிச்சி, கிழங்கொடு” (நற்றிணை, 85 (8 -11)

என்ற பாடலில் பன்றியின் இறைச்சியையும், கிழங்கையும் கொடுத்து விருந்தோம்புவதைப் புலவர் தெளிவுற விளக்கியுள்ளார்.

## முல்லை நில மக்களின் உணவுகள்

காடும் காடு சார்ந்த இடங்களில் வாழ்ந்த முல்லை நில மக்களே மற்ற நிலங்களில் வாழ்பவரை விட மேம்பட்டு இருந்தனர் என்பதனை ந.சி. கந்தையாபிள்ளை பதிவு செய்கின்றார்.

## மகளிர் கடமை

முல்லை நிலத்தில் வாழ்ந்த மகளிர் பண்பில் சிறந்தவர்களாக ஆற்றியிருத்தலை அறமாகக் கொண்டு வாழ்ந்தனர். இது மட்டுமன்று வினை மீண்டு வரும் தலைவைனுக்கு விருந்து ஏற்பாடு செய்பவளாகவும் விளங்குகிறாள். தலைவனும் தலைவியின் விருந்தோம்பும் பண்பை நினைந்து தேரை விரைவாகச் செலுத்தும் தன்மை பெற்றவனாகின்றான்.

"ஆக வன முலைக் கரைவலம் தெறிப்ப

அழுதனள் உறையும் அம் மா அரிவை

விருந்து அயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய" நற்றிணை ,81(6 - 10)

இப்பாடல் வரிகள் மூலம் முல்லை நிலத் தலைவி கற்புடன் இருப்பதோடு, வினைமுடித்து மீண்ட தலைவனை விருந்தினர் போல உபசரிக்கும் பண்பைக் கொண்டிருந்தாள் என்பது புலனாகின்றது.

முல்லை நில மக்களின் உணவுப் பொருட்களாக அரிசி, பால், வெண்ணெய், தயிர், குழம்பு, ஊறுகாய், பால், நெய் ஆகியவற்றைக் கொள்ளலாம். முல்லை நிலமக்கள் உழவுத் தொழில் செய்து சிறப்புப் பெற்றமையை,

"மா புதல் சேர வரகு இணர் சிறப்ப

மா மலை புலம்ப கார் கலித்து அலைப்ப

பேர் அமர்க் கண்ணி" ஐங்குறுநூறு, 496, (1-3)

என்ற பாடல் விளக்குவதோடு வரகு எனும் தானியத்தைப் பயிர் செய்தமையையும் சுட்டிச் செல்கின்றது.

## சோறும் நெய்யும்

மேய்ச்சல் நிலங்களையும், ஆநிரைகளையும் கொண்டு செம்மையான வாழ்வை நடத்திய முல்லை நில மக்கள், பசுநெய்யோடு வெண்மையான சோற்றை இட்டு வைத்ததை,

"பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி

முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு

எழுகலத்து ஏந்தினும் சிறிது" குறுந்தொகை ,10 (2-4)

என்ற பாடலால் அறிந்து இன்புறலாம்.

## மருதத்திணையும் உணவு முறையும்

மருதத்திணையில் நெல் முக்கிய விளைபொருளாக அமைந்துள்ளது. நெல், செந்நெல், ஐவகை நெல், வெண்ணெல் ஆகியவை விளைந்தன. நெல்லை முதன்மைப்படுத்தியே மன்னர்களின் ஆட்சி, நாட்டுவளம் ஆகியன புகழ்ந்துரைக்கப்பட்டன. இதனை,

"வாழி ஆதன், வாழி அவினி

நெல்பல பொலிக பொன் பெரிது சிறக்க

என வேட்டோளே யாயே யாமே" ஐங்குறுநூறு - 1(1-16)

எனும் பாடல் எடுத்துரைக்கின்றது. நெல் என்பது நாட்டில் மட்டுமல்ல வீட்டின் பொருளாதாரத்தைக் குறிப்பதாய் அமைகின்றது.

சடங்குகளிலும் நெல் பயன்படுத்தப்படுகிறது. வேலன் வெறியாடும் போது நெல்லைத் தூவி வழிபடும் முறை இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் வழியாக அறியமுடிகின்றன.

"எம் அணங்கினவே, மகிழ்ந! முன்றில்

நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்

வேலன் புனைந்த வெறிஅயர் களம்தொறும்

செந்நெல் வான்பொரி சிதறி யன்ன”

என்ற பாடல் செந்நெல் பயன்படுத்தப்பட்டமையை உரைக்கின்றது.

வெண்ணெல்லைப் பயிரிட்ட மருத நிலத்தில் அதனை அறுவடை செய்கின்ற பொழுது காக்கைகள் மற்றும் பல்வேறு பறவையினங்களின் ஒலிகள் கேட்கும் என்பதனை,

“வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரிஇ

பழனப் பல் புள் இரிய, கழனி

வாங்கு சினை மருதத் தூங்கு துணர் உதிரும்” நற்றிணை 400 (1-3)

என்ற பாடல் அறிவிக்கின்றது.

## நெய்தலின் விருந்தோம்பல் பண்பு

நெய்தல் நில மக்கள் விவசாயம் செய்தததற்கான குறிப்புகள் காணப்படவில்லை. நெய்தல் நில மக்களின் தொழில் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகியனவாகும். இவர்கள் இப்பொருட்களை விற்றுப் பண்டமாற்றாக உணவிற்குத் தேவையான பொருட்களை வாங்கினர். அவற்றுள் தங்கள் நிலத்தில் விளையாத நெல்லரிசிகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

சிறுபான்மையாகக் கடற்கரை ஓரத்தில் வெண்ணெல்லைப் பயிரிட்டு விவசாயம் செய்தனர். ஆனால், அதன் விளைச்சல் மிகவும் குறைவாகவே இருந்தது. இச்செய்திக்குச் சான்றாக,

“தண் நறு நெய்தல் தளை அவிழ் வான்பூ

வெண் நெல் அரிநர் மாற்றினர் அறுக்கும்

மெல்லம் புலம்பன் மன்ற” ஐங்குறுநூறு ,190 (1 -3)

என்ற பாடல் அமைகின்றது மேலும், நெய்தல் நிலத்தில் எடுக்கப்பெற்ற உப்பை விலை கூறி விற்று அதன் மூலம் வெண்ணெல்லை வாங்கியுள்ளனர். அதற்காக உப்பு விற்பதற்காக உப்பளத்திற்குத் தாய் சென்றதை,

“உப்பை மாறி வெண்ணெல் தரீஇய

உப்பு விளை கழனிச் சென்றனள் அதனால்

பனி இரும் பரப்பின் சேர்ப்பதற்கு” குறுந்தொகை, 269 (5 -7)

என்ற குறுந்தொகைப் பாடல் விளக்கிச் செல்கின்றது.

## பாலை நிலத்தில் உணவு வகைகள்

பாலை நிலத்தின் உணவு வகைகளான இறைச்சிகள், அரிசிச்சோறு, பலி உணவுகள் போன்றவை குறிப்பிடத்தக்கன. பெரும்பாலான பாலை நிலக் கவிதைகள் புலால் உணவையே சித்தரித்துள்ளன. அரிசி உணவுகள் குறித்த பதிவுகள் சிறிதளவே காணப்படுகின்றன. நற்றிணைப் பாடல் ஒன்றில் யானை வெண்ணிற நெல்லைத் தின்ற காட்சியை,

“வெண்ணெல் அருந்திய வரிநுதல் யானை

தன் நறுந் சிலம்பில் துஞ்சும்

சிறியிலைச் சந்தின வாடு பெருங்காட்டே” நற்றிணை பா.7 (7 -10)

புல்லில் விளையும் புல்லரிசியைப் பாலை நிலமக்கள் பயன்படுத்திய முறைமையை,

“கோடை நீடலின், வாடு புலத்து உக்க

சிறுபுல் உணவு, நெறிபட மறுகி

வித்தா வல்சி, வீங்கு சிலை மறவர்

எனும் அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல் எடுத்தியம்புகின்றது. அகநானூறு, 377 (1-2) பாலை நிலத்தில் வாழும் எயினர்கள் பன்றியைச் சமைத்து உண்டதற்கான சான்றுகள் ஐங்குறுநூற்றில் கிடைக்கின்றன.

## முடிவுரை

விருந்து எனும் சொல் புதுமை, புதியவர் எனும் பொருளைக் குறிக்கின்றது. சங்க இலக்கியங்களில் அகம் மற்றும் புறம் சார்ந்த பாடல்கள் விருந்தோம்பல் பண்புகளை எடுத்துரைக்கின்றன. குறிஞ்சி நிலமக்கள் வேட்டையாடிக் கிடைத்த பொருட்களை எல்லோருக்கும் பிரித்தளித்துள்ளனர். வேளாண் தொழில் குறிஞ்சி நிலத்தை விட முல்லை நிலத்தில் அதிகளவில் செய்யப்பட்டது. இச்செய்தி முல்லை நிலத்தின் வளமையைப் பறை சாற்றுகின்றது. நெல், அரிசி போன்றவற்றைத் தெய்வ வழிபாட்டிற்குப் பயன்படுத்தியுள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளது. உழவுத் தொழிலை நேர்த்தியுடன் செய்த மருத நிலமக்கள் அரிசி உணவு, மீன், பால், வெண்ணெய் போன்றவற்றைத் தாமும் உண்டு பிறருக்கும் அளித்த செய்தியைச் சங்க இலக்கியங்கள் கூறிச் சென்றுள்ளன. நெய்தல் நில மக்கள் சிறுபான்மை விவசாயம் செய்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

## References


அகநானூறு, வர்த்தமானர் பதிப்பகம், சென்னை - 17.

ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 98

குறுந்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 1994.

நமசிவாயம், தமிழர் உணவு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை- 29

நற்றிணை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 98

பக்தவத்சல பாரதி, தொ, ஆ. தமிழர் உணவு, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், நாகர்கோவில் - 01

மு. வரதராசனார், உ.ஆ., தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பி (லிட்), சென்னை - 18.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License